# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 51 /2018**

திரு. P. திருப்பதி,
த/பெ பெரியசாமி,
எண்.8A, பசுமேக்கிப்பட்டி,
தேன்கனியூர் அஞ்சல், விராலிமலை தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பேரூந்து நிலையம் அருகில்,
3074, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை – 622 001. . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள்: 20.12.2018**

1. திரு. P. திருப்பதி, த/பெ பெரியசாமி, எண்.8A, பசுமேக்கிப்பட்டி, தேன்கனியூர் அஞ்சல், விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் 8.10.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.51 /2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் ரைஸ் மில் தொழில் செய்து வருவதாகவும், அம்மில்லிற்கு கீரனூர் உட்கோட்டம், விராலிமலை மின் வாரியத்தில் மின்இணைப்பு எண்.170–008–160 என்ற எண்ணில் இணைப்பு பெற்றுள்ளதாகவும், அம்மின் இணைப்பில் தற்போது வைப்புத்தொகையாக ரூ.92124/– உள்ளது என்று தெரிவித்துள்ளார். அத்தொகையில் சென்ற 8ம் மாதத்திற்குரிய மின் தொகை 4744/–ஐ கழித்து கொள்ளுமாறு எதிர்மனுதராரை அணுகியுள்ளார். அம்மனுவிற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் 16.10.2018 அன்றைய தேதியில் மின் கட்டணமாக ரூ.4064/– செலுத்த வேண்டியுள்ளது என்று தெரிவித்து மேல்முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 29.10.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வைபொறியாளர், மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பின் 2017–18 ஆண்டு கணக்கில் கூடுதலாக உள்ள மின்கட்டண காப்புத்தொகை ரூ.92124/–யை திரும்ப வழஙக கோரிய மனுவின் மீது நடவடிக்கை எடுக்குமாறு செயற்பொறியாளர்/கீரனூர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

5. தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய மின் வழஙகல் விதித்தொகுப்பு (TNERC/SC/7–20 dated 30.06.2010) chapter 2(5)(v)ன் படி மீதமுள்ள மின் கட்டணக்காப்புத்தொகை ரூ.92124/–ல் இரண்டு முறை மின் கட்டணத்தொகையை கழித்துவிட்டு மீதம் உள்ள தொகையை மூன்றாவது முறை கேட்பு கணக்கீடு செய்வதற்குள் காசோலையாக வழஙக வேண்டும் என உள்ளது. அதன்படி அவருடைய இரண்டு முறை மின் கட்டண கணக்கீட்டை கணினியில் advance slip No.773300 நாள் 14.11.2018ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் 11/2018 மாத கணக்கீட்டுத்தொகை ரூ.3,515/– ஏற்கனவே அவருடைய கணக்கில் உள்ள வைப்புத்தொகையில் கழித்து கொடுக்கப்பட்டு விட்டது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6. 01/2019ம் மாதத்திற்கு உரிய கணக்கீட்டுத்தொகையை சரிசெய்தது போக மீதம் உள்ள காப்புத்தொகையை P. திருப்பதி அவர்களுக்கு காசோலையாக வழஙகுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், மின்நுகர்வோரின் கோரிக்கை முற்றிலுமாக மேற்பார்வை பொறியாளர் அவர்களால் தீர்க்கப்பட்டுவிட்டது என்றும் மனு எண்.51/2018ல் மேற்கொண்டு விசாரணை ஏதும் தேவை இல்லை என்பதால் இவ்வழக்கினை முடித்துவைத்து ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று எதிர்மனுதாரரின் பதிலுரையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

7. இதனிடையே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய 19.12.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளர் அவர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனு எண்.51/2018–ஐ

திரும்ப பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ அய்யா*

*பார்வை – எனது புகார் மனு **51/2018** திரும்ப பெற்றுக் கொள்ளுதல் – தொடர்பாக*

*எனது மின் இணைப்பு எண்.170–008–160ல் எனது கூடுதல் வைப்புத்தொகையை திரும்ப பெற நான் தங்களிடம் **51/2018** என்ற மனு அளித்து இருந்தேன். தற்பொழுது எனது கோரிக்கை கீரனூர் கோட்டத்தில் ஏற்று சரி செய்து தந்துள்ளபடியால் நான் அளித்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன். மேலும், இது தொடர்பான மேல் நடவடிக்கை வேண்டாம் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*நன்றி*

*Sd / xx xxx xxxxx*
*(P. திருப்பதி) ”*

**8.** மேல்முறையீட்டாளர், தனது **19.12.2018** நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.**51/2018** தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
**1)** திரு. P. திருப்பதி,
த/பெ பெரியசாமி,
எண்.**8**A, பசுமேக்கிப்பட்டி,
தேன்கனியூர் அஞ்சல், விராலிமலை தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

**2)** மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பேரூந்து நிலையம் அருகில்,
**3074**, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை – **622 001.**

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.